தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2008 - 2009

தமிழ்மொழி - ஆண்டு 7

பழசுட்டெண்:..... நேரம்: 150 நிமிடங்கள்

1) கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழில் உள்ள உயிர் எழுத்துகளில் நெட்டெழுத்துகள் எத்தனை?

   அ) 5 ஆ) 12 இ) 7 ஈ) 18

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தமிழில் உள்ள மெய்யெழுத்துகளில் வல்லெழுத்துக் கூட்டம்

   அ) க,ச,ட,த,ப்,ற் ஆ) ங்,ஞ்,ண்.ந்,ம்,ன் இ) ய்,ர்,ல்,வ்,ழ்,ள் ஈ) அ,இ,உ,எ,ஒ

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தனித்தமிழரசாக விளங்கிய யாழ்ப்பாண அரசை 1833 இல் ஏனைய அரசுகளுடன் இணைத்து ஆட்சி செய்த ஐரோப்பியர்

   அ) போர்த்துக்கேயர் ஆ) ஆங்கிலேயர் இ) சிங்களவர் ஈ) ஒல்லாந்தர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. யாழ்ப்பாணத் தமிழரசுக்கு முன்னிருந்த பண்டைய தமிழரசுகளில் ஒன்று அமைந்திருந்த இடம்

   அ) ஆனையிறவு ஆ) திருகோணமலை இ) பூநகரி ஈ) யாழ்ப்பாணம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றில் வினைமுற்று

   அ) வந்த ஆ) மாணவன் இ) வருவான் ஈ) வா

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பாடுவான் என்ற எதிர்கால வினைமுற்றின் இடைநிலை

அ) ப் ஆ) வ் இ) ட் ஈ) த்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. போற்றுதல் என்பதன் எதிர்ச்சொல்

அ) புகழ்தல் ஆ) தூற்றுதல் இ) வியத்தல் ஈ) மீறுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. 500 என்பதை எழுத்தினால்

அ) ஐஞ்நூறு ஆ) ஐநூறு இ) ஐந்நூறு ஈ) ஐன்நூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தண்ணுமை என்று அழைக்கப்படும் தோற்கருவியின் இன்றைய பெயர்

அ) மேளம் ஆ) முழவு இ) மிருதங்கம் ஈ) தம்பட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஐம்பெருங்காப்பியங்களுள் ஆடல்,இசை போன்ற கலைகள் பற்றிக் கூறுவது

அ) சிலப்பதிகாரம் ஆ) சீவகசிந்தாமணி இ) வளையாபதி ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பைங்கிளி காய்கறிகளைப் பறித்துச் சமையல் செய்தாள். இதில் பறித்து என்பது

அ) வினைமுற்று ஆ) பெயரெச்சம் இ) அடைமொழி ஈ) வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. முத்தமிழ் என்ற சொல்லைப் பிரித்தெழுதினால்

அ) மூன்று + தமிழ் ஆ) மூ + தமிழ் இ) முத் + தமிழ் ஈ) மூத்த + தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. கயிலைவன்னியன் காலத்தில் வன்னி எத்தனை பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது?

அ) 7 ஆ) 64 இ) 10 ஈ) 25

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. 'நான் சிங்கத்தைக் கண்டதும் மரத்தில் ஏறித் தாவிக் குதித்து வாலையாட்டுவேன்' என்று கூறிய விலங்கு

அ) பன்றி ஆ) முயல் இ) குரங்கு ஈ) நரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. தனித்தனியே பிரித்தால் பொருள் தராதது

அ) இரட்டைக்கிளவி ஆ) அடைமொழி இ) வினைச்சொல் ஈ) அடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. மச்சம் தின்னும் சிங்கம் நான் - என்பதில் மச்சம் என்பது

அ) கறுத்தபுள்ளி ஆ) காய்கறி இ) புலால் ஈ) பழங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. தமிழ் முன்னோர்களின் இசைத்திறனுக்குச் சான்றாக உள்ள அன்னப்புள்ளின் கற்சிலை அமைந்துள்ள இடம்

அ) திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம் ஆ) வட இந்தியா

இ) மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் ஈ) மதுரை ஆயிரங்கால் மண்டபம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நிலம் பாளம்பாளமாக வெடித்திருந்தது. இதில் பாளம்பாளமாக என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர் இ) வினைச்சொல் ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சினத்தைத் தீயாக உருவகப்படுத்திய புலவர்

அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர் இ) சுப்புரத்தினம் ஈ) இளங்கோ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. நல்லோருக்குச் செய்த உதவி இது போன்றது

அ) கல்மேல் எழுத்து ஆ) நீர்மேல் எழுத்து

இ) மண்மேல் எழுத்து ஈ) காற்றில் எழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. மாசறக் கற்றோனுக்கு சிறப்புக் கிடைப்பது அவர்

அ) வாழும் நாட்டில் ஆ) வேலை செய்யும் இடத்தில்

இ) சென்ற இடமெல்லாம் ஈ) நண்பர்கள் உள்ளத்தில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

குறள்:

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் _____ சுடும்

அ) பனையைச் ஆ) புணையைச் இ) கணையைச் ஈ) மணலைச்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. வரலாற்றில் 'அடங்காப்பற்று' என்ற சிறப்புப்பெயரைப் பெற்ற மண்

அ) வன்னிமண் ஆ) யாழ்ப்பாண மண் இ) கண்டி மண் ஈ) கொழும்பு மண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. சொல்லியத்தில் வரும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை இவ்வாறு கூறலாம்

அ) அடைமொழிகள் ஆ) இடைச்சொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) சொல்லிய உறுப்புகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. மோசிகீரனாரின் தலையைக் காத்தது அவருடைய

அ) அழகு முகம் ஆ) பெருஞ்செல்வம் இ) தமிழ்ப்புலமை ஈ) வீரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. உணவு தட்டில் உள்ளது - இதில் உள்ள செயப்படுபொருள்

அ) தட்டில் ஆ) உள்ளது இ) செயப்படுபொருள் இல்லை ஈ) உணவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. 'கஞ்சமகள் வந்து காணிற் சிரிக்குமோ கண்ணீர் உகுக்குமோ ஆரறிவார்' இதில் கஞ்சமகள் என்பது

அ) சூரியகாந்தி ஆ) தாமரை இ) செவ்வந்தி ஈ) மல்லிகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - இதையொத்த இன்னொரு பழமொழி

அ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஆ) முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

இ) காற்றுள்ள போதே தூற்றிக் கொள். ஈ) அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இறைவன் என்ற ஆண்பாலுக்குரிய பெண்பாற் சொல்

அ) இறைவை ஆ) இறைச்சி இ) இறைவி ஈ) இறைவள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. சினங் கொண்ட குரங்குகள் சங்கெறிந்த உழவரை நோக்கி எறிந்த பொருள்

அ) நுங்கு ஆ) இளநீர் இ) தேங்காய் ஈ) மாங்காய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 15)

2) பின்வரும் பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

சிங்கள இனம் தோன்றுவதற்குக் கரணியமானவன் என்று சொல்லப்படுபவன் விசயன். இவன் கலிங்க நாட்டவன். இவன் இலங்கைக்கு வருவதற்கு முன், சித்தார்த்தர் என்ற இயற்பெயருடைய புத்தர் சில தடவைகள் இலங்கைக்கு வந்தார். இவர் வந்தது கி.மு 500 ம் ஆண்டளவில். அவர் வந்த நாட்களில் தென்னிலங்கையில் இயக்கர்களின் ஆட்சி நடைபெற்றது. வட இலங்கையில் நாகர்களின் ஆட்சி நடந்தது. இவ்விரு இனத்தவரும் தமிழர். எனவே, புத்தர் காலத்தில் முழு இலங்கையும் தமிழர் ஆட்சியில் இருந்தமை தெரிகிறது. இயக்கரது அரசு கல்யாணியிலும் நாகரது அரசு நாகதீபத்திலும் இருந்தன. எல்லாளனுடைய காலத்திலும் அநுராதபுரத்திற்குத் தெற்கே முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசுகள் இருந்தன என்று மகாவம்சம் கூறுகிறது. அதனால் சிங்கள இனம் தோன்றிய பின்னரும் தென்னிலங்கையில் தமிழரது ஆட்சி நிலைத்திருந்தமை தெரிகிறது.

வினாக்கள்:

1. புத்தருடைய காலத்தில் முழு இலங்கையை ஆண்ட இனம் எது?

   _____

   _____

2. சிங்கள இனம் தோன்றுவதற்குக் கரணியமானவன் யார்?

   _____

   _____

3. புத்தருடைய இயற்பெயர் என்ன?

   _____

   _____

4. நாகதீபத்திலிருந்து ஆட்சி நடத்தியோர் யார்?

   _____

   _____

5. புத்தர் இலங்கை வந்த காலம் எது?

   _____

   _____

(புள்ளிகள் 10)

3) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

1. போர்த்துக்கேயர் வெற்றிலைக்கேணியிலும் ஆனையிறவிலும் கோட்டைகளை அமைத்ததன் நோக்கம் என்ன?

2. தமிழர் கலைகளில் நுண்கலைகள் எவை?

3. சீறிப்பாய்ந்து, இஞ்சிவேலியில் இடறி, மஞ்சளுள் விழுந்த சுறாக்கள், கீறிப் பிளந்த பழம் எது?

4. யானையின் மீது பாயவல்ல அம்பு எதன்மேல் பாயாது என்கிறார் ஔவையார்?

4. வெகுண்டெழும் சினம் பாயும் வெள்ளத்தைப்போல் என்ன செய்யும்?

(புள்ளிகள் 15)

4) கீழ்வரும் பாடலைப் படித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

இடர் வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர்போல் - மாந்தர்
உறவு கொள்வரப்பா
ஒடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவது உண்டோ அப்பா
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

வினாக்கள்:

1. மேற்குலத்தார் என்போர் யாவர்?

_____

_____

2. மாந்தர் எப்போது உறவு கொள்வர்?

_____

_____

3. தீண்ட ஒண்ணாதார் யார்?

_____

_____

4. உள்ளம் இரங்கிடும் என்றால் என்ன?

_____

_____

5. இப்பாடல் எதைப்பற்றிச் சொல்கிறது?

_____

_____

(புள்ளிகள் 10)

5) கீழே தரப்பட்டுள்ள இலக்கண வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. அடைமொழிகள் இடம்பெறும் சொல்லியம் ஒன்று எழுதுக.

   _____

   _____

2. குபுகுபு என்ற இரட்டைக்கிளவியை வைத்துச் சொல்லியம் ஒன்று எழுதுக.

   _____

   _____

3. யாழ்ப்பாண அரசின் மன்னன் முதலாம் சங்கிலியன் ஐரோப்பாவிலிருந்து வந்த போர்த்துக்கேயரை எதிர்த்து இறுதிவரை போராடினான்.

   இதில் இடம்பெற்றுள்ள பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று என்பவற்றைத் தருக.

   _____

   _____

4. செயப்பாட்டுவினைச் சொல்லியம் ஒன்று தருக.

   _____

   _____

5. இறந்தகால இடைநிலைகளைத் தருக.

   _____

   _____

(புள்ளிகள் 15)

7) **கீழ்வரும் விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

அ) கயிலைவன்னியன்

ஆ) மழைக்காலம்
மழையின் தேவை,
மழையின்மை,
பெருவெள்ளம்,
மழையால் இன்று அழிவடையும் நாடுகள்,
வன்னியில் மழை, மக்கள் நிலை,
பெருமழையால் விளையும் தீங்குகள், உதவிகள்.

(புள்ளிகள் 15)

8) **தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் எழுதுக.**

காலை எழுந்தவுடன் வானொலியை இயக்குகின்றோம். தாயகச் செய்திகளையும் உலகச் செய்திகளையும் கேட்கின்றோம். கணினியை இயக்கி மின்னஞ்சலைத்தேடுகின்றோம். உலக நாளிதழ்கள் அனைத்தையும் திறந்து வாசிக்கின்றோம். நாம் அறிந்துகொள்ள வேண்டிய பலவற்றையும் தேடிப் பெறுகின்றோம். இவ்வாறு ஊடகங்களால் பல நன்மைகள் கிடைக்கின்றன. எனினும், இவற்றால் பல தீங்குகளும் விளைகின்றன.

(புள்ளிகள் 20)